


திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட – எட்டு சட்டமன்றத் தொகுதிகளின் பாக முகவர்களின் ஆலோசனைக் கூட்டத்தில் வடக்கு மண்டல தேர்தல் பொறுப்பாளரும், பொதுப்பணித்துறை அமைச்சருமான எ.வ.வேலு உரையாற்றினார். உடன் சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, வடக்கு மாவட்டச் செயலாளர் எம்.எஸ்.தரணிவேந்தன், டாக்டர் எ.வ.வே.கம்பன், சி.என்.அண்ணாதுரை.எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, பெ.சு.தி.சரவணன், எஸ்.அம்பேத்குமார், ஒ.ஜோதி மற்றும் டாக்டர் இரா.மாசிலாமணி, எஸ்.பி.மணிமாறன், டாக்டர் மாலதிநாராயணசாமி, பா.செந்தமிழ்செல்வன், ஊரல் அண்ணாதுரை, டாக்டர் ஆர்.டி.அரசு, கே.செந்தில்குமார் ஆகியோர் உள்ளனர்.

### திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட – எட்டு சட்டமன்றத் தொகுதி

# வாக்குச்சாவடி முகவர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## அமைச்சர் எ.வ.வேலு சிறப்புரையாற்றினார்!

*திருவண்ணாமலை, நவ. 10 -*

வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தம் குறித்து, திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட, எட்டு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வாக்குச்சாவடி முகவர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டு, வடக்கு மண்டல தேர்தல் பொறுப்பாளரும், பொதுப் பணித்துறை அமைச்சருமான எ.வ. வேலு சிறப்புரையாற்றினார்.

08.11.2025 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு, திருவண்ணாமலை, மலப்பாம்பாடி, கலைஞர் திடல் தளபதி அரங்கத்தில், வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தம் குறித்து, திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட, எட்டு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வாக்குச்சாவடி முகவர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

ஆலோசனைக் கூட்டத்திற்கு சட்டப்பேரவைத் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி தலைமை வகித்தார். தொகுதி பார்வையாளர்கள் போளூர் டாக்டர் எ.வ.வே.கம்பன், திருவண்ணாமலை டாக்டர் இரா.மாசிலாமணி, கீழ்பென்னாத்தூர் எஸ்.பி. மணிமாறன், செங்கம் டாக்டர் மாலதிநாராயணசாமி, கலசப்பாக்கம் பா.செந்தமிழ்செல்வன், ஆரணி ஊரல் அண்ணாதுரை, செய்யாறு டாக்டர் ஆர்.டி.அரசு, வந்தவாசி கே.செந்தில்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

வடக்கு மாவட்ட செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.எஸ். தரணிவேந்தன் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டு வடக்கு மண்டல பொறுப்பாளரும், பொதுப்பணித் துறை அமைச்சருமான எ.வ.வேலு அவர்கள் ஆலோசனைகளை வழங்கி சிறப்புரையாற்றினார்.

ஆலோசனைக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, சட்டமன்ற உறுப்பினர்கள் செங்கம் மு.பெ.கிரி, கலசப்பாக்கம் பெ.சு.தி.சரவணன், வந்தவாசி எஸ்.அம்பேத்குமார், செய்யாறு ஒ.ஜோதி

தெற்கு மாவட்ட நிர்வாகிகள் அவைத் தலைவர் கோ.சண்ணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் இரா.ஸ்ரீதரன், பொன். முத்து, மாவட்ட பொருளாளர் எஸ்.பன்னீர்செல்வம், மாவட்ட துணை செயலாளர்கள் பிரியா விஜயரங்கன், விஜயலட்சுமி ரமேஷ், வடக்கு மாவட்ட நிர்வாகிகள் மாவட்ட அவைத் தலைவர் இரா. ராஜசேகர், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஆர்.சிவானந்தம், ஆர். வேல்முருகன், கே.வி.ராஜ்குமார், மாவட்ட பொருளாளர் டி.ஏ.தட்சணாமூர்த்தி, மாவட்ட துணை செயலாளர்கள் ந.பாண்டுரங்கள், க.லோகநாதன், ஜெயராணிரவி, மாநகர செயலாளர் ப.கார்த்திவேல்மாறன்,

மற்றும் திமுக தேர்தல் பார்வையாளர்கள், பணிக்குழு ஒருங்கிணைப்பாளர்கள், வாக்குச்சாவடி முகவர்கள், தகவல் தொழிற்நுட்பக்குழு மற்றும் வழக்கறிஞர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



பாகூர் தொகுதியில் திமுக உறுப்பினர் சேர்க்கையை ஜெகத்ரட்சகன் எம்.பி. தொடங்கி வைத்தார். உடன் மாநில அமைப்பாளர் – சட்டமன்ற எதிக்கட்சித் தலைவர் இரா. சிவா, பொருளாளர் இரா. செந்தில்குமார், எம்.எல்.ஏ., ஆகியோர் உள்ளனர்.

### மாநில அமைப்பாளர் இரா.சிவா முன்னிலையில்

# புதுச்சேரியில் 3ம் கட்ட தி.மு.க. உறுப்பினர் சேர்க்கை முகாம்!

## எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. தொடங்கி வைத்தார்!

புதுச்சேரி, நவ. 10 –

தி.மு.கழகத் தலைவர், தமிழ்நாடு திராவிட மாடல் அரசின் முதல்வர் தளபதி அவர்கள் ஒன்றிய பாரதிய ஜனதா அரசின் பாசிச ஆதிக்கத்திலிருந்தும், இதற்கு துணை நிற்கும் புதுச்சேரி பா.ஜ.க கூட்டணி அரசிடமிருந்தும் மாநிலத்தை மீட்டு, புதுச்சேரியின் மண்–மொழி–மானம் காக்க, தி.மு.கழகத்தின் சார்பில் ”உடன்பிறப்பே வா பரப்புரையை முன்னெடுக்க ஆணையிட்டுள்ளார்.

புதுச்சேரி, மாநிலத்தில் உள்ள 30 சட்டமன்ற தொகுதிகளில் உள்ள அனைத்து வாக்குச்சாவடிகளிலும் வீடு வீடாகச் சென்று மக்களை சந்தித்து, பாசிச பா.ஜ.க. கூட்டணி ஆட்சியின் அவலங்களை எடுத்துச் சொல்லி, ஒவ்வொரு வாக்குச் சாவடியிலும் குறைந்தபட்சம் 30 சதவீத வாக்குகளைக் கழக உறுப்பினர்களாக சேர்க்க வேண்டும் என்ற இலக்கும் நிர்ணயிக்கப்பட்டு, தலைமைக் கழகத்தால் ஒருங்கிணைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள திமுக கொள்கைப் பரப்புச் செயலாளர் எஸ். ஜெகத்ரட்சகன் எம்.பி., அவர்கள் ஏற்கனவே முத்தியால்பேட்டை, உப்பளம், முதலியார்பேட்டை, நெல்லித்தோப்பு, உருளையன்பேட்டை, ஊசுடு, இந்திரா நகர், கதிர்காமம், தட்டாஞ்சாவடி, இலாசுப்பேட்டை, காலாப்பட்டு, காமராஜகர் நகர், ராஜ்பவன் ஆகிய 13 தொகுதிகளில் உறுப்பினர் சேர்க்கையை இரண்டு கட்டமாக தொடங்கி உள்ளார்.

மூன்றாம் கட்டமாக நேற்று காலை 09.00 மணியளவில் அரியாங்குப்பம் தொகுதி பழைய அரியாங்குப்பம் ரோடு வீராம்பட்டினம் ரோடு சந்திப்பில் இருந்து தி.மு.க. உறுப்பினர் சேர்க்கை தொடங்கப்பட்டது.

மாநில அமைப்பாளர் இரா. சிவா முன்னிலையில் நடைபெற்ற முகாமில், கழக கொள்கைப் பரப்புச் செயலாளர் எஸ். ஜெகத்ரட்சகன், எம்.பி., அவர்கள் கலந்து கொண்டு, வீடு, வீடாக சென்று திமுக உறுப்பினர் படிவம் கொடுத்து உறுப்பினர் சேர்க்கையை தொடங்கி வைத்தார்.

தொடர்ந்து மணவெளி தொகுதி பூரணாங்குப்பம் கிராமத்திலும், ஏம்பலம் தொகுதி கரிக்கலாம்பாக்கத்திலும், பாகூர் தொகுதிக்கு உட்பட்ட மதிகிருஷ்ணாபுரம், பாகூர், குருவிநத்தம் ஆகிய கிராமங்களில் உறுப்பினர் சேர்க்கை தொடங்கி வைக்கப்பட்டது.

முகாமிற்கு அவைத் தலைவர் எஸ்.பி. சிவக்குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர் சி.பி. திருநாவுக்கரசு, மாநில துணை அமைப்பாளர் வி. அனிபால் கென்னடி எம்.எல்.ஏ.,, பொருளாளர் இரா. செந்தில்குமார், எம்.எல்.ஏ., மாநில இளைஞர் அணி அமைப்பாளர் எல். சம்பத், எம்.எல்.ஏ., ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

முகாமிற்கான ஏற்பாடுகளை அரியாங்குப்பம் தொகுதியில் பொதுக்குழு உறுப்பினர்கள் சக்திவேல், வேலன், கோபாலகிருஷ்ணன், தொகுதி செயலாளர் சீத்தாராமன், மணவெளி தொகுதியில் பொதுக்குழு உறுப்பினர் சண்முகம், தொகுதி செயலாளர் ராஜாராமன், ஏம்பலத்தில் தொகுதி செயலாளர் ரவிச்சந்திரன், பலராமன், பாகூரில் மாநில பொருளாளர் இரா. செந்தில்குமார், எம்.எல்.ஏ., மற்றும் தொகுதி செயலாளர் பாண்டு அரிகிருஷ்ணன் ஆகியோர் செய்திருந்தனர்.

இந்த நிகழ்ச்சியில், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் பூ. மூர்த்தி, நந்தா. சரவணன், மாநில துணை அமைப்பாளர்கள் ஏ.கே. குமார், அ. தைரியநாதன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் கே.எம்.பி. லோகையன், ஜே.வி.எஸ். ஆறுமுகம், ப. காந்தி, டி. அருட்செல்வி, பொதுக்குழு உறுப்பினர்கள் சி. கோபால், வே. கார்த்திகேயன், வெ. ராமசாமி, ப. செல்வநாதன், ந. தங்கவேலு, பெ. வேலவன், எஸ். தர்மராஜன், ஆர். கோகுல், ஆர். ரவீந்திரன், டி. செந்தில்வேலன், டாக்டர் கா. மாயக்கிருஷ்ணன், கே.பி. இளம்பரிதி, பெ. பழநி, மு. பிரபாகரன், எஸ். எஸ். செந்தில்குமார், வே. மாறன், எஸ். அமுதாகுமார், எஸ். நர்கீஸ், தட்டாஞ்சாவடி தொகுதி பொறுப்பாளர் டாக்டர் நித்திஷ், இந்திரா நகர் தொகுதி பொறுப்பாளர் பசுபிக் சங்கர், தொகுதி செயலாளர்கள் எம். ஆர். திராவிடமணி, இரா. சக்திவேல், செ. நடராஜன், ஜி.பி. சவுரிராஜன், எல். மணிகண்டன், து. சக்திவேல், கோ. தியாகராஜன், ர. சிவக்குமார், ரா. ஆறுமுகம், ப. வடிவேல், ஜெ. மோகன், செல்வ. பார்த்திபன், பி.சா. இளஞ்செழியபாண்டியன், கலிய. கார்த்திகேயன், செ. ராதாகிருஷ்ணன், ம. கலைவாணன், வெ. சக்திவேல், சி. சத்தியவேலு, அணிகளின் அமைப்பாளர்கள் மாணவர் அணி மணிமாறன், இலக்கிய அணி சீனு. மோகன்தாசு, தொமுச அண்ணா அடைக்கலம், வழக்கறிஞர் அணி ச. பரிமளம், தகவல் தொழில்நுட்ப அணி தாமோ. தமிழசரன், மகளிர் அணி காயத்ரி ஸ்ரீகாந்த், மகளிர் தொண்டர் அணி சுமதி, தொண்டர் அணி வீரன் (எ) விரய்யன், விவசாய அணி வெ.குலசேகரன், வர்த்தகர் அணி சு.ரமணன், மீனவர் அணி ந. கோதண்டபாணி, ஆதிதிராவிடர் நலக்குழு சி. ஆறுமுகம், கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவை கி. சங்கர் (எ) சிவசங்கரன், பொறியாளர் அணி ஆ. அரு ண்குமார், நெசவாளர் அணி ந. செந்தில் முருகன், விளையாட்டு மேம்பாட்டு அணி ந. ரவிச்சந்திரன், அமைப்புசாரா ஓட்டுநர் அணி ம. மதிமாறன், சிறு பான்மையினர் நல உரிமைப் பிரிவு அ. முகம்மது ஹாலிது, மருத்துவர் அணி லூ. ஆனந்த் ஆரோக்கியராஜ், சுற்றுச்சூழல் அணி த. முகிலன் மற்றும் அணிகளின் தலைவர்கள், துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.





16 ஆம் நாள் நினைவேந்தல்

வணக்கம்

27.10. 2025 திங்கட்கிழமை அன்று

எங்கள் நினைவில் வாழும்

திரு. T.பழனிவேல் அவர்களின் மனைவியும்

எங்கள் அன்புத் தாயாருமான

திருமதி. ப.சௌந்தரி அம்மாள்

வயது97

அவர்கள் இயற்கை எய்தினார். அவர்களின் நினைவுப் போற்றும் நிகழ்வு

10.11.2025 அன்று மாலை 6.00 மணிக்குமேல்

எண் : 15/9 A, தலையாரி தெரு, மேற்கு மாம்பலம், சென்னை - 600 033.

எனும் முகவரியில் அமைந்துள்ள எங்கள் இல்லத்தில் நடைபெறும்.

என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இங்ஙனம் :

ப.தயாநிதி B.A., ( Retd.UCO Bank ) | ப.தாயகம்கவி M.A.,B.L.,M.L.A., கழகத் துணை அமைப்புச் செயலாளர் திரு.வி.க.நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் | ப.கஜேந்திரகுமரன் B.A., | குகானந்த் தண்டபாணி B.E.,

மற்றும் குடும்பத்தினர்கள்